கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப்பரீட்சை I 2020

| வரலாறு I | 33 | T | I | ஒரு மணித்தியாலம் |
|---|---|---|---|---|

**கவனிக்குக.**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு **80** புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைத்தாளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை உரிய வட்டதினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. இலங்கையின் வரலாற்றை அறிய உதவுகின்ற மிகப்பழமையான உள்நாட்டு இலக்கிய மூலதாரமான நூல் பின்வருவனவற்றுள் எது?

   (1) தீபவம்சம் (2) மகாவம்சம் (3) சூழவம்சம் (4) போதிவம்சம்

2. அநுராதபுரத்திலுள்ள புனித வெள்ளரசு மரத்தின் வரலாற்றைக் கூறும் நூல்

   (1) தடாவம்சம் (2) சூழவம்சம் (3) மகாவம்சம் (4) மகாபோதிவம்சம்

3. நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா என்னும் நூலை எழுதியவர்

   (1) பாகியன் தேரர் (2) இபன்பதூதா (3) பிளினி (4) பிலிப்ஸ் பல்டியஸ்

4. கி.பி. 11 ஆம் 12 ஆம் நூற்றாண்டு கால இலங்கையின் வரலாற்றினை அறிய உதவும் பனாகடுவ செப்பு சாசனத்துடன் தொடர்புடைய மன்னன்

   1. 1ம் விஜயபாகு 2. 1ம் பராக்கிரமபாகு 3. நிசங்கமல்லன் 4. வீரபராக்கிரமபாகு

5. கி. பி. 5ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்து அபயகிரி விகாரையில் தங்கியிருந்த சீனப் பிக்கு

   1. ஹியுங் சாங் பிக்கு 2. பாஹியன் தேரர் 3. அல்பலசூரி 4. ரிபைரோ

6. இலங்கையில் முதன்முதலில் குடியேறிய மனித இனம்.

   1. ஆதிஹோமோசேப்பியன் 2. நியாண்டதால் 3. காக்கேசியன் டெனிஸோவன்கள்

7. 35000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித சமூகத்தின் வாழிடமாகக் கருதப்படுகின்ற களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள தாழ்நில ஈரவலயக் குகை
   1. பட்ட தொம்பலென
   2. குருவிட்ட
   3. பெல்லன் பதிபெலஸ்ஸ
   4. பாகியன்கல

8. முன் வரலாற்றுக் காலத்தில் இறந்த ஒருவருக்கு மரணச் சடங்கு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட களிமண் ஓட கல்லறை மயானம் கண்டறியப்பட்ட இடம்.
   1. இப்பன் கட்டுவ
   2. உடரஞ்சமடம
   3. ராவண எல்ல
   4. கல்சொகன்

9. கி.மு. 700 – 450 கால கட்டத்திற்குரிய இப்பன்கட்டுவ கல்லறை மயானத்தினைப் பயன்படுத்தியவர்களாகக் கருதப்படுபவர்கள்.

   1. கமிக 2. குர்க்கபதி 3. பருமக 4. கிரமிக



kalvi.lk

10. உடரஞ்சாமடம என்னும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது வெள்ளை நிறப்பின்னணியில் சிவப்பு நிறக் கோடுகள் மூலம் வடிவமைக்கப்பட்ட பாத்திரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அப்பாத்திரத்தின் பெயர்.
   1. கடக்கு 2. சாடி 3. குடம் 4. மடக்கு

11. குடும்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய குடும்பத் தலைவனுக்கு பிராமிக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயர்.
   1. கமிக
   2. போஜக
   3. குர்ஹபதி
   4. கிராமிக

12. பருமக மாரிடையே பன்முகப்படுத்தப்பட்டிருந்த இலங்கையின் அரசியல் அதிகாரம் ஓரிடத்தில் குவிகின்ற தன்மையை ஏற்படுத்திய மன்னன்
   1. பண்டுகாபயன்
   2. துட்டகைமுனு
   3. வசபன்
   4. தேவநம்பிய தீசன்.

13. சமயம், மொழி ரீதியில் வேறுபட்டிருந்தாலும் தமது அண்டை நாட்டுப் பிரயைகளுடன் நம்பிக்கையுடன் செயற்படுவது இலங்கையை ஆட்சிசெய்த புராதன ஆட்சியாளர்களின் வெளிநாட்டுக் கொள்கையாகும். மேற்படி கூற்றுடன் தொடர்புடைய மன்னன்.
   1. முதலாம் பராக்கிரமபாகு
   2. நிசங்கமல்லன்
   3. விக்கிரம பாண்டியன்
   4. 1ஆம் விஜயபாகு

14. புராதன காலத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்ட கூட்டத்திற்கு வழங்கப்பட்ட பெயர்.
   1. ஆம்ல
   2. காலசுமண
   3. வாணிஜ
   4. புகய

15. வலகம்பா மன்னன் காலத்தில் நூலுருப் பெற்ற திரிபீடகத்திற்கு மேலதிக விளக்கமான அட்டுவாக்களை எழுதிய தேரர்
   1. குப்பிகல திஸ்ஸ தேரர்
   2. புத்தகோச தேரர்
   3. ஶ்ரீ சுமங்கல தேரர்
   4. காரகல வனரத்ன தேரர்

16. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற இந்துக் கோவில்களுக்கு அருகே இருந்த துறைமுகங்கள் முறையே.
   1. மகாதித்த, கலாதித்த
   2. பிம்மதித்த, நில்வளதித்த
   3. சூரகதித்த, கிம்மதித்த
   4. மகாதித்த, கோகன்னதித்த

17. புராதன இலங்கையில் இரும்புத்தாதிலிருந்து இரும்பைப் பிரித்தெடுப்பதற்கான தொழில்நுட்பத்திற்குச் சான்றாக விளங்குகின்ற இரும்பை உருக்கும் சூளை கண்டறியப்பட்ட இடம்.
   1. சமனல வெவ
   2. பெரகல
   3. ஹல்துமுல்ல
   4. உடரஞ்சாமடம

18. சமுதாய நீதியை பாதுகாக்க நடைமுறைப் படுத்தப்பட்ட சட்டங்களை மீறுவோருக்கு தண்டனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட நீதிமன்றத் தொகுதிகள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு
   1. பதுளைத் தூண் கல்வெட்டு
   2. சிந்துல்பவ்வ கல்வெட்டு
   3. தோணிகல கல்வெட்டு
   4. வேவல்கட்டிய தூண் கல்வெட்டு



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

19. கீழ்வரும் கூற்றுக்களை அவதானிக்க.
    - அரசியல் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டமை
    - சிறிய நகரங்களின் உருவாக்கம்

மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புடைய நகரங்களின் சோடி பின்வருவனவற்றுள் எது.

1. அநுராதபுரம், பொலநறுவை
2. அநுராதபுரம், தம்பதெனியா
3. குருநாகல், தம்பதெனியா
4. பொலநறுவை, குருநாகல்

20. கீழ்வரும் வரலாற்று நிகழ்வுகளை அவதானிக்குக.

A – நான்கு கோறளைப் பகுதியின் நிர்வாகியாக இருந்த அம்புலுகலகுமாரன் 8ம் வீரபராக்கிரமபாகு என்னும் பெயரில் அரசனாதல்.

B – கலிங்க மாகன் தோற்கடிக்கப்படல்

C – சீனத்தளபதி செங்ஹோ வீர அழகேஸ்வரனுடன் போரிட்டு அவனைக் கைதியாக்கி சீனாவிற்குக் கொண்டு சென்றமை

D – ஜாதகக் கதைகள் பன்சிய பனஸ்ஜாதகய என்னும் பெயரில் மொழி பெயர்க்கப்பட்டமை

மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகளை அவை இடம்பெற்ற கால ஒழுங்கில் ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையாது?

1. ADCB
2. DCBA
3. BDAC
4. BDCA

21. 2ம் பராக்கிரமபாகு மன்னன் கல்வி கற்ற பௌத்த பிக்குகளின் தலைவர்
    1. சங்கரக்கித மகாதேரர்
    2. வீதாகம மஹாஸ் வீர
    3. காரகல வனரத்ன தேரர்
    4. இறுகல் குலதிலக தேரர்

22. யமசிங்க பண்டாராவின் பின் கண்டி இராச்சியத்தில் புதிய தோர் அரச வம்சத்தினை ஆரம்பித்து வைத்த மன்னன்.
    1. 1ம் இராஜசிங்கன்
    2. 2ம் இராஜசிங்கன்
    3. 1ம் விமலதர்மசூரியன்
    4. 2ம் விமலதர்மசூரியன்

கீழ்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 23ம், 24ம் வினாக்களுக்கு விடை தருக.

| மன்னன் | இளமைக்காலப் பெயர் | பணி |
|---|---|---|
| A – 1ம் விமலதர்மசூரியன் | D – டிக்கிரிபண்டார | G போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து துரத்தினான் |
| B – 2ம் இராஜசிங்கன் | E – கோணப்பு பண்டார | H - முல்லேரியாப் போர் |
| C – 1ம் இராஜசிங்கன் | F - மகா அஸ்தான குமாரன் | J - தெல்கம் விகாரையில் இருந்த புனித தந்ததாதுவைக் கண்டியில் பிரதிஷ்டை செய்தான் |

23. டிக்கிரி பண்டார என்ற இளமைக் காலப் பெயரைப் பெற்றவர் மன்னனான பின் சூடிக் கொண்ட பெயரையும் அவரது பணியையும் குறிப்பிடும் விடை எது?
    1. A,I
    2. C,H
    3. B,F



kalvi.lk

4. C,G

24. 1ம் விமலதர்ம சூரியனின் இளமைக்காலப் பெயரினையும் அவரது பணியையும் குறிக்கும் விடை எது?
   1. E,J
   2. F,H
   3. D,J
   4. E,G

25. கண்டி இராட்சியதில் புனித தந்ததாதுவிற்குப் பொறுப்பான அதிகாரி
   1. கஜநாயக்க நிலமே
   2. சனுவடன நிலதேும
   3. பத்வடன நிலமே
   4. தியவடன நிலமே

26. இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கேயர் ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது கவனம் செலுத்தாமைக்கான காரணம்
   1. கறுவா, மிளகு போன்ற வர்த்தகப்பயிர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் கிடைக்காமை
   2. யாழ்ப்பாண இராட்சியத்தின் இயற்கை அரண்
   3. யாழ்ப்பாண இராச்சியம் போத்துக்கேயருக்குக் கப்பம் செலுத்தாமை
   4. சைவக்குருக்கள்மார் போர்த்துக்கேயரை எதிர்த்தமை.

கீழே A தொடக்கம் E வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 27ம் 28ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A – ஜோன் டொயிலி

B – மியூரன் குழு

C – பிரட்டிக் நோர்த்

D – தோமஸ் மெயிட்லண்ட்

E - மெக்டோவல்

27. 1803ம் ஆண்டு கண்டி இராச்சியத்தின் மீது படையெடுப்பை மேற் கொண்ட ஆளுநரையும் தளபதியின் பெயரையும் தரும் எழுத்துக்கள்.
   1. D, A
   2. C, B
   3. C, E
   4. C, A

28. கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்கான பின்னணியைத் தந்திரமாக உருவாக்கிய ஆளுநரையும், அரச அதிகாரியையும் தரும் விடை
   1. D, A
   2. C, A
   3. B, A
   4. D, E

29. 1848 இல் பல புதிய வரிகளை விதித்த பிரித்தானிய ஆளுநர்
   1. தோமஸ் மெயிற்லட்ன்
   2. பிறடிக் நோர்த்
   3. டொரிங்டன்
   4. றொபேட் பிறவுன்றிக்

30. இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குதலுடன் தொடர்புடைய அரசியல் யாப்பு
   1. டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
   2. சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
   3. 1972 அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
   4. 1978 அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

31. இலங்கையின் சிறு ஏற்புமதிப் பயிச்செய்கை தொடர்பான ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A – குண்டசாலை

B – தெல்பிட்டி



kalvi.lk

C – நாரம்மலை

D – கடலாதெனிய

E – மாத்தளை

மேற்குறித்த சிறு ஏற்றுமதி தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்களுள் முதன் முதலாக 1972ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனத்தினைத் தரும் விடை

1. A
2. B
3. C
4. E

32. இலங்கையில் உள்ள செல்வந்தர்களிடமும், சீன நாட்டு அரசின் உதவியும் பெற்று பலத்கம் தர்மாலங்கார ஸ்ரீ சுமண திஸ்ஸ தேரரால் 1862 இல் காலியில் முதன் முதலாக நிர்மாணிக்கப்பட்ட அச்சகம் பின்வருவனவற்றுள் எது?
    1. லங்கோபகார அச்சகம்
    2. லங்கா பிருவவிஷ்ரத் அச்சகம்
    3. கவடகதிக அச்சகம்
    4. சரசவி சங்கரெஸ அச்சகம்
33. மறுமலர்ச்சி முதன்முதலாக ஆரம்பமான இத்தாலிய நகரம்
    1. மிலான்
    2. வெனிஸ்
    3. புளோரன்ஸ்
    4. கொறிந்
34. பல்வேறு கண்டுபிடிப்புக்களை செய்த சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல்

B – ஜோன் லொகி பெயாட்

C – ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

D – மார்க்கோனி

E – டெம்லர்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுள் கைத்தொழிற் புரட்சியின் போது போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புக்களைச் செய்தோரைக் தரும் விடை

1. B, C
2. C, D
3. E, A
4. C, E

35. கைத்தொழில் புரட்சியினால் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தரும் விடையைத் தெரிவு செய்க.
    1. சேரிப்புறங்கள் உருவாகியமை
    2. சூழல் மாசடைந்தமை
    3. தன்னிறைவுப் பொருளாதார முறை வீழ்ச்சியடைந்து சம்பளத்திற்கு வேலை செய்யும் தொழிலாளர் வகுப்பு ஒன்று தோற்றம் பெற்றது.
    4. குடும்பங்களில் மதுபாவனையின் பயன்பாடு, தவறான செயல்களில் ஈடபடுதல் நெறிபிறழ்ந்த வாழ்க்கைமுறை ஏற்பட்டது.

கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 36 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| A – | 1. 2ம் உலகமகாயுத்தம் | 2. ஐக்கிய நாடுகள் சபை |
| B – | 1. அமெரிக்கப் புரட்சி | 2. பொஸ்டன் தேநீர் விருந்து |
| C – | 1. பிரான்சியப் புரட்சி | 2. உணவு, நிலம், சகோதரத்துவம் |
| D – | 1. வி.ஜெ.லெனின் | 2. ரஷ்யப் புரட்சி |

36. முதலாவது நிகழ்வினால் இரண்டாவது உருவாகக் காரணமாக இருந்த விடயங்களைத் தரும் விடைச் சோடி
    1. B
    2. A
    3. D



kalvi.lk

4. C

37. இரண்டாவது நிகழ்வு முதலாவது ஏற்படுதவற்குக் காரணமாக அமைந்தது இதனைத் தரும் விடைச் சோடி.
1. B 2. A 3. D 4. C

38. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்வித தொடர்பினையும் தராத விடைச் சோடி
1. B
2. A
3. D
4. C

39. அடோல்ப் ஹிட்லரின் இராணுவம், இரகசியப் பொலிஸ் பிரிவு என்பவற்றைத் தரும் விடைத் தொகுதியை முறையே தெரிவு செய்க.
   1. எஸ். எஸ்., கொஸ்டாபோ
   2. ஆர். எஸ்., நாசி
   3. கே.எஸ். , கொட்டாபோ
   4. கருஞ்சண்டை இராணுவம், எஸ். எஸ்
40. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள நாட்டினையும் நகரத்தினையும் தரும் விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.
   1. பிரித்தானியா – லண்டன்
   2. நெதர்லாந்து – ஹேக்
   3. ஜேர்மனி – மீனுச்
   4. பிரான்ஸ் - பரிஸ்

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)

**மாதிரிப் பரீட்சை -I 2020**

**வரலாறு II**

| 33 | T | II |
|---|---|---|

மூன்று மணித்தியாலம் 10நிமிடங்கள்

- ❖ பகுதி 1 இன் முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- ❖ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) கிருந்திஓயா, கலாதித்த, பராக்கிரமசமுத்திரம், திஸ்ஸவாவி, மிகிந்தலை. பெரகல, ஜம்புகோளப்பட்டினம், மட்டக்களப்பு, மகாவாலுகாகம, இரணைமடு, செங்கடகல, தம்பதெனியா (12 புள்ளி)

(ii) அரபிக்கடல், சந்திரநாகூர், கம்போடியா, பர்மா, மலாக்கா தொடுகடல், வங்காளவிரிகுடா (06 புள்ளி)

(ஆ) (i) மேல் வரும் ABCD ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - ரூவன்வெலிசாய தாதுகோபத்தினைக் கட்டிமுடித்த மன்னன்.

B - எல்லாளன் இலங்கையை ஆக்கிரமித்த போது அநுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னன்

C - ஒல்லாந்தரின் உதவியுடன் பர்மாவில் இருந்து பௌத்த குருமாரை வரவழைத்து உபசம்பதா விழாவை நடத்திய கண்டி இராச்சிய மன்னன்

D - சரஜிவோ நகரில் கொலை செய்யப்பட்ட ஆஸ்திரியா நாட்டின் முடிக்குரிய இளவரசன் (04 புள்ளிகள்)

❖ A, B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலங்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A




(ii) 1. A யினால் காட்டப்பட்ட நிர்மாணிப்பின் பெயர் என்ன?

2. இதனைப் பொறுப்பித்த மன்னன் யார்?

3. இதில் கூறப்பட்ட விடயங்களுள் ஒன்று தருக?

4. இதிலுள்ள உருவங்களில் ஒன்றனைத் தருக? (4 புள்ளி)

B



(iii) 1. B இனால் காட்டப்பட்ட நிர்மாணிப்பு காணப்பட்ட இராசதானியின் பெயர் என்ன?

2. இப்பிரதேசத்தினைத் தலைநகரமாக்கிய மன்னன் யார்?

3. மேற்படி நிர்மாணிப்பின் படிவரிசைத் தூண்களில் காணப்படும் கலைப் பாரம்பரியத்திற்கு உரிய நாடுகளைத் தருக?

A - ...........................



kalvi.lk

B - ........................... (4 புள்ளி)

## பகுதி - II

02) (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியேற்றங்கள் பரவியிருந்ததாகக் கருதப்படுகின்ற தாழ்நில ஈரவலயக் குகைகள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்துடனும் தொடர்புடைய விடையை ஒழுங்குமுறையாக எழுதுக.

A - உப்புப் பயன்படுத்தியமைக்கான ஆதாரம்

B - துளையிடப்பட்ட மண்டையோடு கண்டெடுக்கப்பட்ட குகை

C - வளைத்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்ட இடம்

D - களிமண் ஓடக் கல்லறை மயானம் கண்டெடுக்கப்பட்ட இடம் (4 புள்ளி)

(iii) வரலாற்றுக் காலக் குடியிருப்புக்கள் பல்வேறு தொழில்களின் அடிப்படையில் பாகுபடுத்தப் பட்டிருந்தது என்பதனை இரு உதாரணங்களின் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக.(5 புள்ளி)

(iv) வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

03) (i) கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் A, B, C என்ற ஒழுங்கில் தரப்பட்டுள்ளன. அவை குறிக்கும் பொருளைத் தருக.

A - தொட்டபோஜக

B - கஹபதி

C - பருமகலு (3 புள்ளி)

(ii) மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய பின்வரும் பணிகளுக்குப் பொறுப்பானவர்களின் பதவிப் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து A, B, C, D ஒழுங்கு முறையில் எழுதுக.

A - நகர கட்டட நிர்மாணி

B - உணவுச் சாலை அதிகாரி

C - தலைமை அமைச்சர்

D - அரச செயலகத் தலைவர்

(நடஅதெக, மஹமத, பதகு, நகரகுத்திக, படகரிக, சேனாதிபதி, நகரவடிக, பனபெடிக)(4 புள்ளி)

(iii) புராதன இலங்கையில் அரசுரிமை கிடைத்த இரு முறைகளையும் உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளி)

(iv) வசப மன்னன் அரசை மத்திய மயப்படுத்தப்படுவதற்காக மேற்கொண்ட முயற்சிகளை மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக. (6 புள்ளி)

04) (i) அநுராதபுர காலத்தில் தேவநம்பியதீச மன்னனுக்குப் பின்னர் அரசுரிமையை பெற்ற அவரின் சகோதரர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளி)

(ii) புராதன காலத்தில் பொதுமக்களுக்குத் தேவையான பொதுச் சுகாதார வசதிகளை வழங்கிய வைத்தியசாலைகளுக்கு வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயர்களைத் தருக. (4 புள்ளி)



kalvi.lk

(iii) பொதுச் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக வைத்தியத்துறைக்குப் பங்களிப்புச் செய்த மன்னர்கள் மூவரைக் குறிப்பிட்டு அவர்களில் ஒருவரின் பணியைச் சுருக்கமாக விளக்குக.(5 புள்ளி)

(iv) புராதன காலத்தில் பின்பற்றப்பட்ட சூழல் பாதுகாப்பு முறைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

05) (i) மேல்வரும் A, B, C ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

A - மாகம என்னும் இராட்சியத்தை உருகுணுரட்டைப் பிரதேசத்தில் உருவாக்கியமை

B - மகாமேக நந்தவனத்தை அமைத்தமை

C - ஜேத்தவனராமய விகாரையை அமைத்தமை (3 புள்ளி)

(ii) A - வரலாற்று ரீதியான மாயரட்டைப் பிரதேசத்தினூடாகக் கடலில் கலக்கின்ற பிரதான நதிகளில் இரண்டையும்

B - வரலாற்று ரீதியான இராசரட்டைப் பிரதேசத்தினூடாகக் கடலில் கலக்கின்ற பிரதான நதிகளில் இரண்டையும் தருக. (4 புள்ளி)

(iii) இரண்டாம் நகராக்க காலத்தின் பொருளாதார நடவடிக்கைகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் சிரேஷ்ட ஆட்சியாளனாகக் கருதப்படுவதற்கு ஏதுவான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விபரிக்குக. (6 புள்ளி)

06) (i) A - சீதாவாக்கை மன்னனான மாயாதுன்னையின் நண்பனான கண்டி இராட்சிய ஆட்சியாளன்

B - 1 ஆம் இராஜசிங்க மன்னனுக்கு கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்கு உதவிய கண்டி இராச்சிய பிரதானி

C - டொன்பிலிப் என்ற பெயரில் ஞானஸ்தானம் பெற்ற கரலியத்த பண்டாரவின் மருமகன்

ஆகியோரின் பெயர்களை A, B, C என்ற ஒழுங்குமுறையில் எழுதுக. (3 புள்ளி)

(ii) A - மடிகே பத்த

B - ஹெந்த பத்த

C - படஹெல பத்த

D - குருவே பத்த

ஆகிய வரிகள் விதிக்கப்பட்ட பிரிவுகளை A, B, C, D ஒழுங்குமுறையில் எழுதுக. (4 புள்ளி)

(iii) கண்டி இராச்சியத்தில் நீதி நிலைநாட்டப்பட்ட முறையை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) கி. பி. 1803 ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தின் மீதான ஆங்கிலேயரின் படையெடுப்பு தோல்வி அடைந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

07) (i) இலங்கை மீது ஆதிக்கத்தினைச் செலுத்திய ஐரோப்பிய நாடுகள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) பின்வரும் ஆண்டுகளில் இலங்கைக்கு வருகை தந்த

A - பிரித்தானியத் தூதுவர்களையும்

B - அவர்கள் வரும்போது கண்டி இராட்சியத்தை ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்களையும் தருக.

1762 -

1795 - (4 புள்ளி)

(iii) 1796 - 1798 வரை

A - இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்தவர்கள்

B - அவர்களின் ஆட்சிமுறை



kalvi.lk

பற்றி இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) 1797 இல் இலங்கையின்

A - கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கான காரணங்களையும்

B - மியூரன் குழுவின் பரிந்துரைகளையும் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

## பகுதி - III

08) (i) பிரெஞ்சுப் புரட்சியின் மூன்று எண்ணக்கருக்களையும் தருக. (3 புள்ளி)

(ii) மேல்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்ட ஒவ்வொரு கூற்றிற்குமுரிய விடைகளை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக. (4 புள்ளி)
(கிறிஸ்ரோபர்கொலம்பஸ், பேடினற்மகலன், ஏழாண்டுப்போர், ஜோன்கிரவில், ஜோர்ஜ் வோசிங்டன், மேரி அன்ரொயிட், ஐந்தாண்டுப் போர், லியோன் ட்றொஸ்கி)

A - கரீபியன் கடலில் பகாமாஸ் தீவில் இறங்கிய நாடுகாண்பயணி

B - அமெரிக்காவின் குடியேற்ற வீரர்களின் படையணிக்குத் தலைமை தாங்கியவர்

C - 16 ஆம் லூயி மன்னனின் மனைவி

D - பிரித்தானியாவிற்கும், பிரான்சிற்கும் இடையில் இடம்பெற்ற யுத்தம்

(iii) பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கான பொருளாதாரக் காரணிகளை இரண்டு விடயங்களின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திற்கான பின்னணியை மூன்று காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. (6 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

09) (i) 1870 களில் உருவாகிய மத்திய ஐரோப்பிய அணியில் அங்கம் வகித்த மூன்று நாடுகளைத் தருக. (3 புள்ளி)

(ii) அடோல்ப் ஹிட்லரின்

A - தாய் நாடு

B - எழுதிய நூல்

C - கட்சி

D - இராணுவம்

ஆகியவற்றின் பெயர்களை ஒழுங்கு முறையில் தருக. (4 புள்ளி)

(iii) 1 ஆம் உலக யுத்தம் ஏற்படுவதற்கான பின்னணியை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)


(iv) 1 ஆம் உலக யுத்தத்தின் பின் உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின்

A - நோக்கங்கள்

B - சமாதானத்திற்கு மேற்கொண்ட முயற்சிகளை விபரிக்குக. (6 புள்ளி)



kalvi.lk






kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන



kalvi.lk



கல்வி





kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන



kalvi.lk





 க. பொ. த. (சா/தர) - 2020
**மாதிரிப் பரீட்சை - 01**

**வரலாறு - II** **விடைகள்**

**பகுதி I**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 11 | 3 | 21 | 1 | 31 | 4 |
| 2 | 4 | 12 | 2 | 22 | 3 | 32 | 1 |
| 3 | 3 | 13 | 4 | 23 | 2 | 33 | 3 |
| 4 | 1 | 14 | 3 | 24 | 1 | 34 | 4 |
| 5 | 2 | 15 | 2 | 25 | 4 | 35 | 1 |
| 6 | 1 | 16 | 4 | 26 | 1 | 36 | 2 |
| 7 | 4 | 17 | 1 | 27 | 3 | 37 | 1 |
| 8 | 2 | 18 | 2 | 28 | 1 | 38 | 4 |
| 9 | 3 | 19 | 3 | 29 | 3 | 39 | 1 |
| 10 | 4 | 20 | 4 | 30 | 2 | 40 | 2 |

**பகுதி – II**

**01. ஆ (i)**

A. சத்தாதிஸ்ஸ மன்னன்
B. அசேலன்
C. 2 ஆம் விமலதர்ம சூரியன்
D. பிரான்சிஸ் பேர்டினன்ட்

**(ii) 1.** கல்பொத்த கல்வெட்டு
2. நிஸ்ஸங்கமல்லன்
3. 1. பௌத்த சமயத்தைச்சாராத ஒருவர் இலங்கையை ஆட்சி செய்ய முடியாது.
2. கலிங்க வம்சத்திற்கு இலங்கையிலுள்ள ஆட்சியுரிமை
4. யானை / அன்னம்

(iii) 1. யாப்பகுவா
2. 1 ஆம் புவனேகபாகு
3. A – பாண்டிய தேசம் / இந்தியா
**B – கம்பூச்சியா / கம்போடியா**

02) (i) பாகியன்கல
பட்டதொம்பலன
கித்துள்கல பெலிவென

(ii) A - கித்துள்கல பெலிவென
B - இராவண எல்ல
C - குருவிட்ட பட்டதொம்பலென
D - உடரஞ்சாமடம / பெரகல / ஹல்துமுல்ல

(iii) காசீகாரகாம - விவசாயிகள் வாழும் கிராமம்
மணிகாரகாம - இரத்தினம் அகழ்வோர் வாழ்ந்த கிராமம்



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

கோபாலகாம - இடையர் வாழ்ந்த கிராமம்
கேவட்டகாம – மீனவர் வாழ்ந்த கிராமம்
வட்டசீகாம - தச்சர் வாழ்ந்த கிராமம்
கும்பகாரகாம குயவர்வாழ்ந்தகிராமம் (விளக்கம்

(iv) புவியியல் காரணிகள்
மழைவீழ்ச்சி
மண்ணின் தன்மை
தரைத்தோற்ற வேறுபாடு
இயற்கை வளங்களின் பரம்பல்
நீரோடைகள் (தரம் 10 26ம் பக்கம்)

03) (i) A - படகுத்துறையை நிர்வகிப்பவர்
B - குடும்பத் தலைவர்
C - குளங்களை நிர்வகித்த பெண் தலைவி

(ii) A - நகர வடிக
B - பதகு
C - மகா அமதி / மஹமத
D - பனபெடிக

(iii) தந்தையிடம் இருந்து - மகனுக்கு
காவன்திஸ்ஸன் - துட்டகைமுனு
மூத்த சகோதரனிடம் இருந்து - தம்பிக்கு

(iv) 1) வசப மன்னனின் கல்வெட்டுக்கள் இலங்கை முழுவதும் பரவியிருந்தமை
2) மாவட்டங்கள் - நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை
உ+ம் :- யாழ்ப்பாணம் ரிஷிகிரி
வரி அளவீடு முறைமைப் படுத்தப்பட்டிருந்தது.

04) (i) உத்திய
மகாசிவ
சூரதிஸ்ஸ

(ii) A - வெஜ்ஜசாலா
A - உபசக்கரோகதாச
B - பஸவந்தி நாமசால / திம்பிரிகே
C - சொத்திசாலா

(iii) புத்ததாஸ
5 ஆம் மகிந்தன்
4 ஆம் காசியப்பன்
1 ஆம் உபதிஸ்ஸ
பண்டுகாபயன்
துட்டகைமுனு

புத்ததாஸ - வைத்திசாலைகளை நாடுமுழுவதும் நிர்மானம் செய்தான்
5 ஆம் மகிந்தன் - நாடெங்கும் காணப்பட்ட சகல வைத்தியசாலைகளுக்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்கினார்.
4 ஆம் காசியப்பன் - அநுராதபுரத்தை அண்மித்த பிரதேசங்களில் பரவிய காச்சலுக்காக விசேட வைத்தியசாலை ‘உபசக்கரோகநாச’வை அமைத்தான்.
1 ஆம் உபதிஸ்ஸ - பஸவந்தி நாமகாலா எனப்பட்ட பிரசவத்திற்கான வைத்திய சாலைகளை அமைத்தான்
பண்டுகாபயன் - சொத்திகாலா எனப்பட்ட வைத்தியசாலைகளை அமைத்தான்

(iv) சட்டங்கள் வகுத்தமை



kalvi.lk

உ+ம் :- ✶ உயர்நிலங்களில் உள்ள மரங்களைகளை வெட்டக்கூடாது
- 4 ஆம் மகிந்தன்

✶ காட்டுமரங்களை வெட்டக்கூடாது
- 3 அம் உதயன்

✶ மரஞ்செடி முகாமைத்துவத்தில் அரசினால் அமுல் செய்யப்பட்ட சட்டதிட்டங்கள் பின்பற்றப்பட வேண்டும்.
- 5 ஆம் காசியப்பன்

✶ இயற்கைச் சூழலில் வாழும் உயிரினங்கள் மண் என்பவை பாதுகாக்கப்பட வேண்டும்.

✶ நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொல்லக்கூடாது – நிஸ்ஸங்க மல்லன்

05) (i) A - மாகாநாமன்
D - மூத்த சிவன்
E - மகாசேனன்

(ii) A - தெதுறு ஓயா
மகா ஓயா
களனி கங்கை
களு கங்கை

B - மல்வத்து ஓயா
கலா ஓயா
யான் ஓயா
மகாவலி கங்கை

(iii) ✶ ஜீவனோபாயம் விவசயாம்
✶ நெல் பிரதான பயிர், மழையை நம்பியது.
✶ நீர் பற்றாக்குறையான பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
✶ வர்த்தகப் பயிர்ச்செய்கை
✶ மேலதிக விளைச்சல் விற்பனை செய்யப்பட்டது.
✶ வெளிநாட்டுத் தொடர்பு
✶ கறுவா - வர்த்தகப் பயிர்
✶ பாக்கு, மிளகு, ஏலம், சாதிக்காய் போன்றவற்றின் மேலதிக விளைச்சல் ஏற்றுமதி செய்யப்பட்டது.
✶ முத்து, மாணிக்கம், யானை, யானைத் தந்தம் ஏற்றுமதி செய்யப்பட்டது.
✶ இந்தியா, அரேபியா, சீனா, பாரசீகம் எகிப்து நாடுகடன் வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது.

(iv) கலிங்கமாகன் படையெடுப்பு
சந்திரபானு படையெடுப்பு - ஜாவா நாட்டு ஆக்கிரமிப்பாளன்
40 வருட கலிங்கமாகனின் ஆட்சியை முறியடித்தான். (விளக்கம்)

06) (i) A - ஜயவீரபண்டார
B - வீரசுந்தர பண்டார
C - யமசிங்க பண்டார

(ii) A - போக்குவரத்து
B - நெசவு
C - வனைதல்
D - யானை பிடித்தல்

(iii) ✶ உயர் அதிகாரம் மன்னனிடம் இருந்தது.
✶ உத்தியோகத்தருக்கு அவரவர் உத்தியோகத்திற்கு ஏற்ற நீதி அதிகாரம் இருந்தது



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

* முக்கிய தலைவர்கள்
  இராஜத்துரோகம்
  கிளர்ச்சி குழப்பங்கள்
  சூழ்ச்சிகள் தொடர்பானவை
  மன்னன் நேரடியாகத் தலையிட்டு தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது

(iv)
* மக்கள் மன்னனுக்கு வழங்கிய ஆதரவு (ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்)
* ஆங்கிலேயரால் மன்னராகப் பிரகடனம் செய்யப்பட்ட முத்துச்சாமிக்கு மக்கள் ஆதரவு வழங்காமை
* மழைக்காலம் ஆரம்பித்தமை
* ஆங்கிலப் படையினரிடையே நோய்கள் பரவ ஆரம்பித்தமை
* கரையோரப் பகுதியில் இருந்து ஆங்கிலேயருக்குக் கிடைத்த உதவியை கண்டியர் தடைப்படுத்திமை
* உணவு, குடிபானங்களுக்குத் தட்டுப்பாடு
* கொழும்புடனான தொடர்புகள் தடைப்பட்டமை
* முத்துச்சாமி இளவரசன் கொலை செய்யப்பட்டமை

07) (i) போர்த்துக்கல்
ஒல்லாந்து / கொலன்ட் / நெதர்லாந்து
பிரித்தானியா

(ii) 1762 - ஜோன் பைபஸ் - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
1795 - ரொபர்ட் அன்ரூஸ் - இராஜாதிஇராஜசிங்கன்

(iii) A - ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பனி , பிரித்தானிய அரசு
பிரித்தானிய அரசு

B -
* வரி வசூலிப்பதற்கு சென்னை நிர்வாக (ரெசிடன்) வதிவிடப் பிரதிநிதி நியமிக்கப்பட்டமை.
* அவுமில்தார்கள் போன்ற அதிகாரிகள் வரி வசூலிக்க நியமிக்கப்பட்டமை

(iv) A
சுதேச முதலியார்மார் கவனிக்கப்படாமை
* கரையோரத்தில் இருந்த பதவிகளுக்கு சென்னை உத்தியோகஸ்தர்கள் வரவழைக்கப்பட்டமை.
* மொழி, கலாசாரம், சம்பிரதாயங்கள் போன்றவற்றில் அனுபவம் இல்லாதவர்கள் இதனால் பொதுமக்களுக்கும் - அதிகாரிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.
* புதிய வரிகள் இலாபம் ஈட்டும் போக்கில் ஆங்கிலேய வர்த்தகக் கம்பனியில் விதிக்கப்பட்டது - தென்னை வரி
* வரி பணமாகச் செலுத்தப்பட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டது.

B -
* வரி வசூலிப்பதில் ஈடுபட்டிருந்த சென்னை உத்தியோகத்தர்கள் திருப்பி அனுப்பப்பட்டு அவர்களுக்குப் பதிலா சுதேச உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
* தெங்கு உட்பட்ட வரிகள் நீக்கப்பட வேண்டும்.
* வரி வசூலிப்பதற்கும், நீதி வழங்குவதற்கும் வெவ்வேறான உத்தியோகத்தர்கள் அமர்த்தப்படல் வேண்டும்.
* ஒல்லாந்தரின் நீதிமன்ற முறையை ஸ்தாபித்தல்

## பகுதி - III

08) (i) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

(ii) A - கிறிஸ்ரோபர் கொலம்பஸ்,
B - ஜோர்ஜ் வோசிங்டன்
C - மேரி அன்ரொயிட்
D - ஏழாண்டுப் போர்



kalvi.lk

(iii) திறைசேரியின் வெறுமை

அரசனதும், அரச குடும்பத்தினரதும் ஆடம்பர வாழ்க்கை

தேவையற்ற யுத்த செலவு

(iv) ✶ அமெரிக்க குடியேற்றவாசிகள் சுய நிர்வாகத்திற்கு பழக்கப்பட்டிருந்தமை.

✶ பிரித்தானியரின் பொருளாதாரக் கொள்கை

✶ 1763 இல் அமுல் செய்யப்பட்ட புதிய வரிகள்

✶ சுதந்திரம் தொடர்பான ஆர்வம்

09) (i) ஜேர்மனி

ஆஸ்திரியா

இத்தாலி

(ii) A - ஆஸ்திரிய

B - எனது போராட்டம் / Main Kampf

C - தேசிய சோசலிசக்கட்சி / நாசி

D - *S.S.* இராணுவம்

(iii) ✶ குடியேற்ற வாதப் போட்டி

✶ ஆயுதப் போராட்ட வளர்ச்சி

✶ பிஸ்மார்க்கின் கொள்கைகள்

✶ ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசனின் கொலை (உடனடிக் காரணம்)

(iv) A - ✶ கருத்து வேறுபாடுகளைச் சமாதானமாகத் தீர்த்தல்

✶ உலக யுததம் எதிர்காலத்தில் ஏற்படுவதைத் தவிர்த்தல்

✶ சர்வதேச புரிந்துணர்வினையும் ஒத்துழைப்பையும் கட்டியெழுப்புதல்

✶ சிறிய நாடுகளின் சுதந்திரம் சுயாதீனம் என்பவற்றினைப் பாதுகாத்தல்

✶ மனித குல ஒற்றுமை மூலம் சமாதானத்தைப் பாதுகாத்தல்

B - ✶ சுவீடன் - பின்லாந்து

ஜேர்மனி - போலந்து, கிரேக்கம், பல்கேரியா

ஈரான் - துருக்கி யுத்த முரண்பாடு தவிர்ப்பு

✶ அகதிகள் புனர்வாழ்விற்கு நடவடிக்கை எடுத்தமை.

✶ சட்டவிரோத அடிமை வியாபாரம் போதைப் பொருள் வர்த்தகம் ஒழித்தமை.


✶ 1ம் உலக யுத்தத்தின் பின் சர்வதேச நம்பிக்கைப் பொறுப்பின் கீழிருந்த குடியேற்ற நாடுகள் தொடர்பான மேற்பார்வை.

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

1. அ (i)




ஜம்புகோளப்பட்டினம்
இரணைமடு
திஸ்ஸவாவி
மிகிந்தலை
பராக்கிரமசமுத்திரம்
மட்டக்களப்பு
தம்பதெனியா
செங்கடகல
பெரகல
கலாதித்த
கிரிந்தி ஓயா
மகாவாலுகாகம




kalvi.lk

1. அ (ii)




Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk